# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No.96 / 2021 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 4 |
| Name | : சிவநேசன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.03.2025.

--------

1, 2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது விருதுநகர் மாவட்டம், மாவட்ட குற்றப்பிரிவு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.11.2018 தேதி செக்காணூரனி காவல் நிலையத்தில் பயிற்சி சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது அன்று காலை 6.00 மணியளவில் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் ஆய்வாளர் அவர்களின் உத்தரவை பெற்று என்னுடன் இருந்த மு.நி.கா. 1143 ஜெயபாண்டி, மு.நி.கா. 624 இளையராஜா இவர்களுடன் புறப்பட்டு சம்பவ இடமான பாலூத்துப்பட்டி ரோடு வடக்கம்பட்டி சுடுகாடு அருகில் நாங்கள் சென்று மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து செய்தபோது அந்த இடத்தில் இரண்டு நபர்கள் இருந்தவர்கள் எங்களை பார்த்து ஓட முயன்றவர்களை பிடித்து விசாரிக்க முன்னுக்கு பின் முரணாக விலாசங்களை கூறியவர்களை மேலும் விசாரிக்க அதில் ஒருவர் தான் தேனி மாவட்டம், போடி தருமத்துபட்டி கருப்பசாமி கோயில் தெருவை சேர்ந்த வீரணன் மகன் தேவராஜ் எனவும், மற்றொருவர் அதே ஊரை சேர்ந்த ராமராஜ் மகன் தம்பிராஜ் என்றும் கூறினார்கள். மேலும் அவர்கள் அந்த இடத்தில் இருந்ததற்கான முகாந்திரம் கேட்க,

அதில் எதிரி தேவராஜ் என்பவர் தாங்கள் பாண்டிச்சேரி சென்று குறைந்த விலைக்கு மது பாட்டில்கள் வாங்கி அதை அதிக லாபத்திற்கு விற்பதற்காக அந்த இடத்தில் மேற்படி மதுபாட்டில்களை பதுக்கி வைத்திருப்பதாக கூறினார். மேலும் அவர்களை 6.30 மணிக்கு கைது செய்து எதிரி தேவராஜ் என்பவரை விசாரிக்க தானாக முன்வந்து எந்தவொரு அச்சுறுத்தல் இன்றி தான் போடியை சேர்ந்தவர் என்றும், கருமாத்தூர் அருகில் உள்ள பாலூத்துபட்டியில் திருமணம் செய்து அங்கேயே தங்கியிருப்பதாகவும், அவருக்கு வருவாய் சரியாக இல்லாததால் குடும்பத்தின் ஏழ்மை நிலையை கருதி தனக்கு தெரிந்த தனது ஊரை சேர்ந்த தம்பிராஜ் என்பவரை அழைத்து தனது குடும்ப கஷ்டத்தை கூறிய போது மேற்படி தம்பிராஜ் பாண்டிச்சேரி சென்று குறைந்த விலையில் மதுபாட்டில்கள் வாங்கி வந்து அதிக லாபத்திற்கு விற்கலாம் என தன்னிடம் கூறியதாகவும், அதன்பேரில் நாங்கள் இருவரும் பாண்டிச்சேரி சென்று அங்கு இனம் தெரியாத நபரிடம் குறைந்த விலைக்கு மது பாட்டில்கள் வாங்கி, அதை சம்பவ இடத்தில் மறைத்து வைத்திருப்பதாகவும் தாங்கள் இருவரும் அதை எடுத்து யாருக்காவது அதிக விலைக்கு விற்கலாம் என்ற விவரத்தை வாக்குமூலமாக கூறினார். அவர் கூறிய ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னை அழைத்து சென்றால், நாங்கள் மறைத்து வைத்திருக்கும் மது பாட்டில்களை எடுத்து ஆஜர் செய்கிறேன் என கூறினார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை 6.45 மணிக்கு பதிவு செய்தேன். அதில் என்னுடன் இருந்த மு.நி.கா. ஜெயபாண்டி, மு.நி.கா. இளையராஜா ஆகியோர் சாட்சியாக கையொப்பம் செய்தார்கள். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.1. அதன்பின்பு எதிரி தேவராஜ் எடுத்து ஆஜர் செய்த 750 எம்.எல் பிடிக்கக்கூடிய ஸ்பீடு பிராந்தி என எழுதப்பட்ட பிராந்தி பாட்டில்கள் 169ம், 750 எம்.எல். கிரீன் மேஜிக் என்று எழுதப்பட்ட பிராந்தி பாட்டில் ஒன்றும் அத்தாட்சி பிறப்பித்து மேற்படி காவலர்கள் முன்னிலையில் கைப்பற்றினேன். மேற்படி அத்தாட்சி அ.சா.ஆ.2. மேற்படி எதிரிகளையும், கைப்பற்றி சொத்துக்களையும் நிலையம் கொண்டு வந்து 10.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை (கு.எண்.378-2018 இதச பிரிவுகள் 4(1) (A), 4(1) (aaa) TNP Act படியும் மற்றும் 328 இதச வாக) பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3. அதன்பின்பு எதிரிகளையும், கைப்பற்றிய சொத்துக்களையும் ஆய்வாளர் அவர்களிடம் ஆஜர் செய்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பணி சம்மந்தமாக காவல் நிலையத்தில் பொது நாட்குறிப்பில் தினந்தோறும் பதிவு செய்வது வழக்கம் என்றால் சரிதான். என்னுடைய பணி சம்மந்தமாக எனது



பாக்கெட் டைரியில் பதிவு செய்வது வழக்கம் என்றால் சரிதான். காலை சுமார் 6.00 மணிக்கு நிலையத்திலிருந்து மூன்று பேர் தனித்தனி இருசக்கர வாகனத்தில் புறப்பட்டோம். பாலூத்துப்பட்டி கிராமத்தில் 150 வீடுகள் இருக்குமா என்றால் ஞாபகமில்லை. சம்பவ இடத்தில் சுமார் ஒன்றரை மணி நேரம் இருந்தோம். சம்பவம் சம்மந்தமாக புகார் கொடுக்கவில்லை. அந்த பகுதியை சேர்ந்த கிராம நிர்வாக அலுவலர், தலையாரி ஆகியோர்களுக்கு தகவல் கொடுத்தோமா என்றால் இல்லை. அவ்வாறு பாட்டில்களை கைப்பற்றியபோது புகைப்படம் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. சம்பவ இடத்தை காண்பிக்கக்கூடிய வரைடபம், மகஜர் தயார் செய்தேனா என்றால் இல்லை. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியை நான் தான் கைப்பட எழுதினேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னை அழைத்து சென்றால் நான் வைத்திருந்த மது பாட்டில்களை எடுத்து ஆஜர் செய்வதாக எதிரி தேவராஜ், நான் தயார் செய்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் வாசகம் இடம்பெறவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் தனிநபர் சாட்சியம் வாங்கவில்லை. கிரீன் மேஜிக் மதுபாட்டிலில் வெள்ளை துணி போட்டு மாதிரிக்காக எடுத்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளை கைது செய்ததது சம்மந்தமாக காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லவில்லை. நாங்கள் நிலையம் சென்றபோது 10.00 மணி இருக்கும். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும், காவல் நிலையத்திற்கும் சுமார் 10 கி.மீ தூரம் இருக்கும். மேற்படி மது பாட்டில்களின் லேபிள்களை போட்டோ எடுக்கவில்லை. எனது மேலதிகாரிக்கு தனி அறிக்கை கொடுக்கவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் சான்று பொருட்களை பகுப்பாய்விற்கு அனுப்புவதற்கு முன்பாகவே விஷசாராய வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரிதான். புள்ளிவிவர கணக்கிற்காக எனது மேலதிகாரியையும், அரசாங்கத்தையும் திருப்தி படுத்துவதற்காக இந்த குற்றச்செயலில் சம்மந்தமில்லாத எதிரிகள் இருவரையும் நிலையத்திற்கு வரவழைத்து அவர்களை இரவு முழுவதும் அடித்து நானாக நிலையத்தில் தயார் செய்த அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கட்டாயப்படுத்தி கையெழுத்து பெற்றேன் என்றால் சரியல்ல. எதிரிகளை நாங்கள் தாக்கியதால் ஏற்பட்ட காயத்தை

நீதிபதியிடம் காண்பிக்கப்பட்டபோது அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. நான் முதல் விசாரணையில் சொன்னது போன்று சொன்ன இடத்தில் எதிரிகள் எந்த குற்ற செயலையும் செய்யவில்லையென்றும், அப்படி நடந்திருந்தால் பக்கத்தில் குடியிருக்கும் கிராம



மக்களையோ, கிராம நிர்வாக அலுவலரையோ அழைத்து நான் தயாரித்த ஆவணங்களில் கையெழுத்து பெற்றிருப்பேன் என்றால் சரியல்ல.
ம.வி.இல்லை.

தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது

ஒம் / P.S. ரஸ்கின் ராஜ்,
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No. 96/ 2021 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 5 |
| Name | : வனிதா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.03.2025.

--------

1, 2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது உசிலம்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2018ம் வருடம் செக்காணூரணி வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது 21.11.2018ம் தேதி மேற்படி நிலைய சார்பு ஆய்வாளர் சிவநேசன் பதிவு செய்திருந்த மேற்படி காவல் நிலைய கு.எண்.378-2018, பிரிவுகள் 4(1)(A), 4(1) (aaa) TNP Act (Transport) மற்றும் 328 இதச வின் கீழான முதல் தகவல் அறிக்கையினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு எதிரிகளின் கைதை உறுதி செய்தும், அத்தாட்சி மற்றும் சொத்துக்களை பார்வையிட்டு உரிய பதிவுகளை செய்தும், சாட்சிகளை மு.நி.கா. ஜெயபாண்டியன், மு.நி.கா. இளையராஜா, சார்பு ஆய்வாளர் சிவநேசன் ஆகியோர்களை விசாரித்தும் வாக்குமூலம் பெற்றும், எதிரிகளின் கைது பற்றி உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து உரிய பதிவுகள் செய்து எதிரிகளை தக்க வழிகாவலுடன் நீதித்துறை நடுவர் எண்.2, உசிலம்பட்டி அவர்களிடம் அனுப்பி வைத்தேன். பின்னர் அத்தாட்சியில் கைப்பற்றிய



வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி படிவம் 91 அ.சா.ஆ.4. பின்னர் 13.12.2018ம் தேதி மேற்படி வழக்கு சொத்துக்களுக்கு ஆர்பிஆர் எண் பெற்றேன். மேற்படி வழக்கு சொத்துக்களின் புகைப்பட நகல்கள் (எண்ணம் 2) அ.சா.ஆ.5 வரிசை ஆகும். பின்னர் 14.12.2018ம் தேதி பெண் காவலர் 792 பேச்சியம்மாள் என்பவர் உசிலம்பட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலிருந்து வழக்கு சொத்துக்களை நீதிமன்ற உத்தரவுப்படி பெற்று

பகுப்பாய்வு கூடத்தில் ஒப்படைத்து வந்தவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 10.01.2019ம் தேதி ராமச்சந்திரன், ஆய்வக பரிசோதனை அலுவலர் என்பவரை விசாரணை செய்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி தடயவியல் சான்று அ.சா.ஆ.6. பின்னர் நான் பணியிட மாறுதலில் சென்றதால் வழக்கு கோப்பை நிலையத்தில் ஒப்படைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாக்குமூலங்களை எப்போது பெற்றேன் என்றால் 21.11.2018, பகல் 12.00 மணி இருக்கும். கைது செய்யப்பட்ட உறவினர்களுக்கு கைது பற்றிய தகவலை சொல்லி அவர்களை வரவழைத்து கைது அறிக்கையில் கையெழுத்து பெற்றுள்ளேனா என்றால் கையெழுத்து பெறப்பட்டது, ஆனால் நாள், தேதி போடவில்லை. வழக்கு பதிவு செய்து எதிரிகளை நீதிமன்றத்திற்கு அனுப்பியபின்பு எவ்வளவு கால இடைவெளியில் பகுப்பாய்விற்கு அனுப்பினேன் என்றால் 13.12.2018ம் தேதி ஆர்பிஆர் எண் பெற்றதும் அனுப்பி வைத்தேன். வழக்கு பதிவு செய்யப்பட்டது 21.11.2018 என்றால் சரிதான். ஆய்வக பரிசோதனை அலுவலர் 17.12.2018ல் நீதிமன்றத்திற்கு தடயவியல் அறிக்கை அனுப்பியுள்ளார். வழக்கு சொத்துக்களை புகைப்படம் எடுத்தோம். சம்பவ இடத்திற்கு நான் சென்று பார்க்கவில்லை. பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வழக்கு பதிவு செய்த அன்று நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தேன் என்றால் சரிதான். எனக்கு கீழ் பணிபுரிந்த சார்பு ஆய்வாளர் புள்ளிவிவர கணக்கிற்காக நிலையத்தில் ஆவணங்களை தயாரித்து போடப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக நான் நிலைய பொறுப்பு அதிகாரியாக இருந்ததால் அவர் பதிவு செய்த வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு
செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால்
சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால்
கையொப்பம் இடப்பட்டது

ஓம் / P.S. ரஸ்கின் ராஜ்,
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.